# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.

S.C.No.3/2016

Deposition of witness for Prosecution – PW15

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சேகர் | Caste | : | |
| S/o. | : | ராமசாமி | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed on 19.08.2025 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

A1 present. A2 absent, petition u/s.317 Cr.PC filed and allowed.

முதல் விசாரணை;

நான் கொண்டலாம்பட்டியில் குடியிருக்கிறேன். நான் கட்டிட கூலி வேலை செய்து வருகிறேன். 22.12.2014ம் தேதி என் மகன் ராஜா, மருமகள் சரோஜா, பேத்தி தனலட்சுமி ஆகியோர் காலை 9.30 மணிக்கு இருசக்கர வாகனம் எண். TN 30 2166 வாகனத்தில் என்னுடைய மகனின் மாமனார் வீடுள்ள ராசிபுரத்திற்கு சென்றார்கள். எனது மருமகள் சரோஜாவிற்கு ஆதார் அட்டைக்கு போட்டோ எடுப்பதற்காக சென்றார்கள். சந்தியூர் ஆட்டையாம்பட்டி பிரிவில் நாமக்கல்லிருந்து சேலம் நோக்கி வந்த மணல் லாரி சேலத்திலிருந்து ராசிபுரம் நோக்கி

சென்ற பேருந்தின் மீது இடித்து என் மகன் சென்ற வாகனத்தையும் இடித்துவிட்டது. அ தே இடத்தில் என் மகனும், மருமகளும் இறந்துவிட்டார்கள். என் பேத்தியை சேலம் அரசு ம ருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். என் பேத்தியும் போகும்வழியில் இறந்துவிட்டார். நான் விபத்து நடந்த இடத்திற்கு சென்று பார்த்தேன். என் மகன் மணல் லாரிக்கு அடியில் சக்கரத்திற்கு இடையில் சிக்கி கிடந்தார். என் மருமகள் மணல் லாரியின் சக்கரத்திற்கு அடியில் இருந்தார்.

பிறகு நான் சேலம் அரசு மருத்துவமனைக்கு வந்து என் பேத்தியை பார்த்தேன். அவர் வரும் வழியிலேயே இறந்துவிட்டதாக சொன்னார்கள். மருத்துவமனையில் போலிசார் என்னை விசாரித்தார்கள். அதன்பின்னரும் போலிசார் என்னை விசாரித்தார்கள்.

1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

விபத்து குறித்து யார் தகவல் சொன்னார்கள் என்றால் மல்லூர் போலிசார் தகவல் சொன்னார்கள். வழக்கு சம்மந்தமாக மல்லூர் காவல் நிலையத்திற்கு எத்தனனை முறை சென்றேன் என்றால் 2,3 முறை சென்றிருப்பேன். மல்லூர் காவல்நிலையத்தில் எத்தனை கையெழுத்து வாங்கினார்கள் என்றால் 2 கையெழுத்துகள் வாங்கினார்கள்.

2ம் எதிரி தரப்பில் 1ம் எதிரி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை தழுவிக்கொள்ளப்பட்டது.

Sd/- S.Sumathy,
Principal Sessions Judge, Salem.